ISSN : *2456-821X* **Vol. 5 Issue 2 Dec 2021**

புதிய அவையம்

---

### *மரண தண்டனைக்கு எதிரான உணர்ச்சிக் குரல் 'உதிரிப்பூக்கள்'*

***முனைவர் ந.சோழன்***, *உதவிப் பேராசிரியர் , தமிழ்த்துறை,*

*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*

*திருப்பத்தூர் - 635 601.*

---

*மனித இனமானது காலவளர்ச்சியில் நாகரிகம் அடைந்து கொண்டே வருகின்றது. நாகரிக வளர்ச்சியில் தனி மனிதனுக்கோ, சமூகத்திற்கோ தீங்கு விளைவிக்கும் செயல்களைக் குற்றம் எனக் கொண்டு அதற்குத் தண்டனையும் வழங்கத் தொடங்கினர். தொடக்க காலத்தில் தண்டனை வழங்கும் அதிகாரம் சமூகக் குழுக்களிடம் இருந்தது. பிறகு, முடியாட்சிக் காலத்தில் மன்னரிடமும் குடியாட்சிக் காலத்தில் நீதிமன்றத்திடம் அவ்வதிகாரம் சென்றது. அவ்வாறே இலக்கியத்திலும் சமூக ஊடகத்திலும் தண்டனை குறித்த பதிவுகளும் காணக்கிடைக்கின்றன. அவ்வகையில் இலக்கியக் கருவினை எடுத்துக்கொண்டு திரைப்படக் கலையின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ள உதிரிப்பூக்கள் என்ற திரைப்படமானது மரண தண்டனையினை மையமிட்ட படமாக அமைந்துள்ளது. எனவே அத்திரைப்படம் கட்டமைக்கும் மரண தண்டனை குறித்த கருத்தமைவினை ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.*

**உதிரிப்பூக்கள்**

*புதுமைப்பித்தனின் சிற்றன்னை என்ற குறும் புதினத்தினை மூலக்கதையாகக் கொண்டு இயக்குநர் மகேந்திரனின் திரைக்கதை, வசனம், இயக்கத்தில் 1979 அக்டோபர் 19 அன்று வெளிவந்து வெற்றி பெற்ற திரைப்படம்தான் உதிரிப்பூக்கள். புதுமைப்பித்தனின் சிற்றன்னைக் கதையினையும் இத்திரைப்படத்தினையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டிற்கும் பெருத்த வேறுபாடு இருப்பதனை வெளிப்படையாகவே காணமுடியும். சிற்றன்னையின் மையக் கதாபாத்திரமான*

சுந்தரவடிவேலுவினை இயக்குநர் மகேந்திரன் வேறுகண்ணோட்டத்தில் அணுகித் திரைக்கதையினை வடிவமைத்துள்ளார். சுந்தரவடிவேலு என்ற கதாபாத்திரத்தின் பெயரும் இயல்பும் தவிரப் பிற கதை நிகழ்வுகள் முற்றிலும் மாறுபட்டு இருக்கின்ற இத்திரைப்படத்திற்கான மூலக்கதை புதுமைப்பித்தனின் சிற்றன்னை என்று இடம்பெறச் செய்த இயக்குநரின் பெருந்தன்மை பாராட்டத்தகுந்தது. கதைத் திருட்டு குறித்த புகார்களும் வழக்குகளும் பெருகி வருகின்ற தற்காலத் திரையுலகம் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கதைக்களம்**

ஒரு பள்ளியின் தாளாளராக உள்ளார் சுந்தரவடிவேலு (விஜயன்). அவர் ஊரில் உள்ள எவரும் தன்னை விடச் சிறப்பு பெற்றவராக இருக்கக்கூடாது என்ற மனப்போக்கினை உடையவர். சுந்தரவடிவேலுவின் மனைவி இலட்சுமி (அஸ்வினி). அவர்களுக்கு ராஜா, பவானி என்ற இரண்டு பிள்ளைகள். சுந்தரவடிவேலு தன்னுடைய மனைவியின் தங்கையான செண்பகத்தின்மீது மோகம் கொள்கிறான். தனது மனைவியை நோயாளி எனக் காரணம் காட்டி மச்சினியை மணந்து கொள்ள முயற்சி செய்து ஏமாறுகின்றான். மனைவி இறந்த பிறகு வேறு ஒரு பெண்ணை இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து கொள்கிறான். செண்பகத்திற்குப் பிரகாஷ் என்பவருடன் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. திருமணத்திற்கு முந்தைய நாள் சுந்தரவடிவேலுவைச் சந்தித்து ராஜாவையும் பவானியையும் தன்னுடனே கூட்டிச் செல்ல அனுமதி கோருகின்றாள் செண்பகம். அப்போது அவளை ஆசீர்வதிக்கிறேன் என்று சொல்லி நிர்வாணப்படுத்தி மானபங்கம் செய்கின்றான் சுந்தரவடிவேலு. இதனை அறிந்த ஊரார் அவனுக்கு மரணத்தினைத் தண்டனையாக வழங்குகின்றனர்.

**பாத்திரக் கட்டமைப்பு**

மரண தண்டனைக்கு உள்ளாகும் சுந்தரவடிவேலுவின் பாத்திரம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் அக்கதாபாத்திரம் மரண தண்டனைக்கு உரிய குற்றவாளிதானா என்பதனைக் காட்சிகள் எவ்விதம் கட்டமைத்துள்ளன என்பது குறித்தும் திரைப்பார்வையாளர் நோக்கில் இனிக் காண்போம்.

**உடைக் கட்டுப்பாடு**

சுந்தரவடிவேலு தாளாளராக உள்ள பள்ளிக்கு ஆசிரியராக வருகின்ற பிரகாஷோடு தொடங்குகின்றது படம். பிரகாஷ், பள்ளிக்குப் பேண்ட், சட்டை போட்டுக்கொண்டு வந்திருப்பதனைக் கண்டு பள்ளிக்கு ஆசிரியர் இதுபோன்று வரக்கூடாது. வேட்டி, ஜிப்பா அணிந்து வரவேண்டும் எனக் கூறுகின்றார் சுந்தரவடிவேலு. பார்வையாளர்களுக்கு இது ஒரு பெரிய விஷயமாகத் தோன்ற வாய்ப்பில்லை. சொல்லப்போனால் மாணவர்களுக்கென்று உடைக்

கட்டுப்பாடு இருப்பதுபோல ஆசிரியர்களுக்கும் அவ்வாறு இருப்பதில் தவறொன்றும் இல்லையே எனவே தோன்றுகின்றது. ஆனால் அடுத்த காட்சியிலேயே அந்தப் பள்ளியில் உள்ள பிற ஆசிரியர்கள் பிரகாஷிடம் தங்களுக்கும் தொடக்கத்தில் இந்நிலைமையே ஏற்பட்டது என்றும் அதற்குக் காரணம் சுந்தரவடிவேலுவிற்கு, 'மற்றவர்கள் நன்றாக வாழ்வது பிடிக்காது, நல்ல சட்டை போடுவதுகூடப் பிடிக்காது, சொல்லப்போனால் பிறருக்கு நல்ல மனைவி அமைவதுகூடப் பிடிக்காது' எனச் சொல்லும்போதே சுந்தரவடிவேலு கதாபாத்திரத்தின்மீது எதிர்மறை எண்ணம் தோன்றத் தொடங்கி விடுகின்றது.

**குறை சொல்லி**

சுந்தரவடிவேலு தன்னுடைய மனைவி இலட்சுமி சமைத்த உணவினைச் சாப்பிடும்போது சோற்றினிடையே சிறுகல் இருப்பதனைக் கண்டு திட்டத் தொடங்குகின்றான். திட்டும்போது உன்னைக் கட்டிக்கொள்ளாமல் நான் வேறு எவளையாவது கட்டியிருந்தால் நிம்மதியாக இருந்திருப்பேன் எனக் கூறுகின்றான். இதன்வழி, அவன் கட்டிய மனைவிக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடியவன் என்ற எதிர்மறை எண்ணம் பார்வையாளர்களிடையே கட்டி எழுப்பப்படுகின்றது.

**நேர்மறை எண்ணம்**

கதையோட்டத்தில் இதுவரை எதிர்மறை எண்ணம் தோன்றும்படியாகக் கட்டமைக்கப்பட்ட சுந்தரவடிவேலு கதாபாத்திரத்தின்மீது சற்றே நேர்மறை எண்ணம் தோன்றும் படியான காட்சியும் இடம்பெறுகின்றது. அவ்வூரிலுள்ள முடிதிருத்தும் தொழிலாளி வீதி வழியாகச் செல்லும் சுந்தரவடிவேலுவிடம் என்னுடைய மகனை நன்றாக, அடித்துப் படிக்க வைங்க, சரிப்பட்டு வரலைன்னா சொல்லுங்க, என்னுடைய தொழிலுக்குக் கொண்டு வந்து விடுகிறேன் என்கிறான். அதற்குச் சுந்தரவடிவேலு கவலைப்படாதீங்க, அவன் நல்லா படிப்பான் என்று சொல்லும்போது கதாபாத்திரத்தின் மீதான எதிர்மறை எண்ணம் சற்றே குறையத் தொடங்குகின்றது.

**மச்சினியைப் பெண் கேட்டல்**

பிறருக்கு நல்ல மனைவி அமைவதுகூடப் பிடிக்காது எனச் சுந்தரவடிவேலுவின் தன்மை தொடக்கக் காட்சியிலேயே வெளிப்படுத்தப்படும். அதற்கேற்ப அவனும் தனது மனைவியின் தங்கையான செண்பகத்துடன் பள்ளி ஆசிரியரான பிரகாஷ் பழகத் தொடங்குவதனைக் கண்டித்துவிட்டு மாமனாரிடம் வந்து பேசத் தொடங்குகிறான். பேச்சின் தொடக்கத்திலேயே தனது மாமனாரிடம் உங்கள் மகளுக்கு (தனது மனைவி) மருத்துவமனை சென்று மருந்து வாங்கிவந்து சாப்பிட்டே காலம் கழிகின்றது என்பதனை உணர்த்திப் பேசத் தொடங்குகின்றான். பிறகு, அவர்களின் பொருளாதார நிலையினையும் தன்னிடம் கடன் வாங்கியுள்ளதனையும் சுட்டி,

மச்சினியைப் பெண் கேட்கின்றான். மாமனார், பதிலேதும் சொல்லாமல் வேறு ஏதாவது பேசலாமே என்று தவிர்க்கிறார். மனைவியின் நோயைக் குணப்படுத்தி அவளோடு வாழ்வதுதானே முறையாக இருக்கும் சுந்தரவடிவேலு இவ்வாறு நடந்து கொள்வது முறையல்ல என்ற எதிர்மறை எண்ணம் தோன்றும்படியே இக்காட்சியிலும் கதாபாத்திரம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

**நல்ல தகப்பனுமல்லன்**

இதுவரையான காட்சிகளின்வழி மனைவிக்கு நல்ல கணவனாக இல்லாதவனாகக் கட்டமைக்கப்பட்ட சுந்தரவடிவேலு, நல்ல தகப்பனாகவும் இல்லாதவனாகக் கட்டமைக்கப்படுகின்றான். மகள் பவானிக்குக் காய்ச்சல் கடுமையாக இருக்கின்றது, இப்போதே மருத்துவரிடம் சென்று பார்க்க வேண்டும் என மனைவி இரவில் சொல்லும்போது, காய்ச்சல் தானே காலையில் போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்கிறான் சுந்தரவடிவேலு. இக்காட்சியின் வாயிலாகவும் அவன் மீதான எதிர்மறை எண்ணம் மேலும் வலுப்பெறத் தொடங்குகின்றது. அதோடு மட்டுமல்லாமல் தனது மகளுக்குப் பெரியம்மை வந்திருக்கின்றது என மனைவி சொல்வதைக் கேட்டுக் கவலை கொள்ளாமல் கிராம சுகாதார ஆய்வாளரிடம் சென்று தகவல் சொன்னால் ஆயிரம் ரூபாய் கிடைக்கும் எனச் சுந்தரவடிவேலு சொல்லும்பொழுது அவன் மீதான எதிர்மறை எண்ணம் வலுவாகக் கட்டமைக்கப்படுகின்றது.

**மனைவிக்குத் துரோகம் செய்பவன்**

மச்சினியைத் திருமணம் செய்துகொள்ள மாமனாரிடம் பேசிப் பயனில்லாமல் போனதால் மனைவியிடமே பேசத் தொடங்குகின்றான் சுந்தரவடிவேலு. மனைவியிடம் நீ நோயாளியாக இருக்கிறாய் என்று சொல்லிவிட்டு, நான் வேறொருவரைத் திருமணம் செய்து கொள்வதைவிட, உன் தங்கையையே திருமணம் செய்து கொண்டால் உனக்கு வசதியாக இருக்கும் எனப் பேசுகின்றான். அதற்கு அவள், எனக்கு இனி நோய்த் தொந்தரவு இருக்காது என மருத்துவர் சொல்லிவிட்டார் எனச் சொல்லி மறுக்கின்றாள். இதனால் கோபம் கொள்ளும் அவன் கிராமத்தில் உள்ள சுகாதார ஆய்வாளருக்கும் தனது மனைவிக்கும் தொடர்பு உள்ளது என ஊர்ப் பஞ்சாயத்தில் கூறி அவளை விலக்கி வைக்கின்றான். இதனால் அப்பா வீட்டிற்குச் செல்கின்றாள் இலட்சுமி. கணவன், குழந்தைகளைத் தன்னுடன் அனுப்பி வைக்க மறுக்கின்ற காரணத்தால் குழந்தைகளை நினைத்து நினைத்து ஏங்கியே சிலநாட்களில் இறந்தும் விடுகின்றாள் இலட்சுமி. மேற்சுட்டிய காட்சிகள் சுந்தரவடிவேலுவை இனித் திருந்தவே வாய்ப்பில்லாத கொடூரமான பாத்திரமாகப் பார்வையாளர்களின் மனதில் கட்டமைப்பதற்குப் போதுமானதாகின்றது.

**குழந்தைகளை அனுப்பி வைத்தல்**

சுந்தரவடிவேலுவின் மனைவி குழந்தைகளைக் காணாத ஏக்கத்தில் இறக்கும் தருவாயில் உள்ளாள். அப்போது செண்பகம் வந்து குழந்தைகளை அனுப்பக் கேட்கின்றாள். சுந்தரவடிவேலுவும் எதிர்ப்பு தெரிவிக்காமல் குழந்தைகளை அனுப்பி வைக்கின்றான். இவ்விடத்தில் அவன் தவறு செய்தவனாக இருந்தாலும் குழந்தைகளை அனுப்பி வைப்பதன்வழி, பார்வையாளர்களின் சாபத்தில் இருந்து தப்பித்துக் கொள்கின்றான். எனினும் கதாபாத்திரத்தின் மீதுள்ள எதிர்மறை எண்ணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

**கரிசனமும் மனமாற்றமும்**

சுந்தரவடிவேலுவிடம் குழந்தைகள் இருவரும் பசியின் காரணமாக நேற்று இரவு என்னைத் தேடி வந்தனர் எனப் புலம்பி அவனைத் திட்டுகின்றாள் செண்பகம். உடனே வீட்டுக்குச் செல்லும் சுந்தரவடிவேலு தன்னுடைய இரண்டாம் தாரத்தினை நோக்கித் திட்டத் தொடங்குகின்றான். அவன் திட்டத் தொடங்குகையில் மனைவியின்மீது தான் அவனுக்கு அன்பில்லை குழந்தைகளின் மீதாவது அன்பு இருக்கிறதே என நிம்மதியும் சற்று கரிசனமும் கொள்ள எத்தனிக்கின்றனர் பார்வையாளர்கள். ஆனால் அவள் எதுவும் பேசாமல் குளியலறையிலிருந்து உடைமாற்ற வருகின்றாள். உடனே அவளின் மீது மோகம் கொண்டு குற்றம் அவள்மீது இல்லை என்றும் பிள்ளைகளின் மீதே குற்றம் என்றும் மாற்றி பேசத் தொடங்கும்போது சுந்தரவடிவேலுவின்மீது எழுந்த கரிசனமும் பார்வையாளரின் மனதில் சரிந்து விழுந்து விடுகின்றது.

**மானபங்க ஆசீர்வாதம்**

சுந்தரவடிவேலுவின் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்த பிரகாஷ் என்பவருக்கும் செண்பகத்திற்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. செண்பகம், திருமணத்திற்கு முந்தைய நாள் சுந்தரவடிவேலுவின் இல்லத்திற்கு வந்து, எனக்குத் திருமணத்தைவிட அக்காவின் குழந்தைகள்தான் முக்கியம். அதனால் குழந்தைகளை என்னிடம் கொடுத்து விடுங்கள் என்கிறாள். அதற்குச் சுந்தரவடிவேலு அதற்கென்ன அவ்வாறே செய்கிறேன். அதற்கு முன்பு உனக்கு ஆசீர்வாதம் செய்கிறேன் என்று சொல்லி அவளை நிர்வாணமாக்கி மானபங்கப் படுத்துகின்றான். இவ்விடத்தில் நாளை திருமணம் நடக்க இருக்கும் பெண்ணை மனதளவில் சிதைத்த சுந்தரவடிவேலு கதாபாத்திரத்தின்மீது பார்வையாளர்களுக்குக் கடும் கோபமும் மன்னிப்பிற்குத் தகுதி இல்லாத மனப்பித்து பிடித்தவன் என்ற எண்ணமுமே கட்டமைக்கப்படுகின்றது. இதனையே இரண்டாம் தாரமாக வந்தவளும், ‘இவ்வளவு அற்பத்தனமாக நடந்து கொண்ட உங்களைப் பொம்பளையாகப் பிறந்த எவளும் மன்னிக்க மாட்டாள்’ எனச் சொல்லிவிட்டுப் பிரிந்துசென்று விடுகின்றாள்.

**ஊராரின் மரணதண்டனை**

*சுந்தரவடிவேலுவின் செயலானது ஊராருக்குத் தெரியவருகின்றது. அவர்கள் அனைவரும் கோபமுற்று அவனது வீட்டை முற்றுகையிடுகின்றனர். தப்பிக்க வழியில்லாத சுந்தரவடிவேலு ஊராரிடம் சரணடைகிறான். அவனை ஊரார் ஆற்றுக்குக் கூட்டி வந்து மரணதண்டனை கொடுக்கின்றனர். இக்காட்சிவரை பார்வையாளர்களின் மனதில் சுந்தரவடிவேலு மரண தண்டனைக்கு உரியவனாகவே கட்டமைக்கப்படுகின்றான். நமது இந்திய அரசும் குற்றம்புரிபவருக்கு அவர்கள் குற்றத்தின் தன்மைக்கேற்ப தண்டனை வழங்கப் பல்வேறு சட்டப்பிரிவுகளை உருவாக்கியுள்ளது. அதுவும் மரண தண்டனை என்பது 'அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்' (அ.மார்க்ஸ்,2013:50) என நீதிமன்றமே கூறி இருக்கின்றது. ஆனால், அதே நீதிமன்றம் 2001ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட அப்சல்குருவிற்கு மரணதண்டனை வழங்கிய தீர்ப்பில், (அப்சல்குருவிற்கு) 'மரணதண்டனை அளிப்பதன் மூலமே சமூகத்தின் கூட்டு மனசாட்சி திருப்தியுறும்' (அ.மார்க்ஸ்,2013:31) எனக் கூறியுள்ளது. சட்டம், சாட்சிகளின் வழியாக வழங்கப்படவேண்டிய தீர்ப்பானது சமூகத்தின் கூட்டு மனசாட்சியைத் திருப்தி செய்ய முயன்றுள்ளமையும் நோக்கத்தக்கது.*

*இவ்விடத்தில் சுந்தரவடிவேலுவிற்கு மரணதண்டனை கொடுக்கக் கூடிய அளவிற்கு அவன் செய்த குற்றம் என்ன என்று பார்த்தால், அவன் தனது மனைவிக்குக் குடும்ப வன்முறை செய்தது, மச்சினியைத் திருமணம் செய்ய நினைத்து அது முடியாமல் போகவே அவளை மானபங்கப்படுத்தியது ஆகியவையே நம் கண்முன் வந்து முக்கியமானவையாக நிற்கின்றன. இக்குற்றங்களுக்கு நீதிமன்றத்தின் கருத்துப்படி அரிதினும் அரிதாகக் கருதியும் மரணதண்டனை வழங்க முடியாது. நீதிமன்றம் எப்படி அப்சல்குருவின் மரணதண்டனையில் சமூகத்தின் கூட்டு மனசாட்சியையும் கருத்தில் கொண்டதோ அதைப்போல அந்தக் கிராம மக்களும் தங்களின் கூட்டு மனசாட்சி திருப்தியுறுவதற்காகவே மரணதண்டனை வழங்கியுள்ளனர். இதனைத் தண்டனை வழங்கிப் பேசுகின்ற முடிதிருத்தும் தொழிலாளியின், 'இதுவரைக்கும் நீங்க செய்த கொடுமை எல்லாவற்றுக்கும் பதில் சொல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது. நீங்க வாழத் தகுதி இல்லாத மனிதன். ஏன்னா நீங்க யாரையும் வாழவைத்தது இல்ல. நாங்க நினைச்சா உங்க சாவு ஒரே நிமிஷம். ஆனா எங்க கையால அதைச் செய்ய விரும்பல. எல்லோருடைய வாழ்க்கையையும் நீங்க அழிச்ச மாதிரி, இப்ப உங்க முடிவை நீங்களே தேடிக்கிங்க. அதுதான் எங்க எல்லோருடைய தீர்மானம்' என்ற கூற்றும் உறுதிப்படுத்தி நிற்கின்றது.*

***மரணதண்டனைக்கு எதிரான உணர்ச்சிக் குரல்***

*நீச்சல் தெரியாத தனக்கு ஆற்றில் இறங்கிச் சாகவேண்டும் என ஊரார் அளித்த தீர்ப்பினை ஏற்றுக்கொண்டு சுந்தரவடிவேலு, 'நீங்க எல்லாரும் ரொம்ப நல்லவங்களா இருந்தீங்க. ஆனா இன்னைக்கு உங்கள எல்லாரையும் நான் என்னப் போல மாத்திட்டேன். நான் செய்த தவறுகளிலேயே பெரிய தவறு அதான்' என்று பேசும்போது சுந்தரவடிவேலுமீது அதுவரை பார்வையாளர்களின் மனதில் கட்டமைக்கப்பட்டு இருந்த எதிர்மறை எண்ணம் அடியோடு விழுந்து நொறுங்குகின்றது. அதற்குக் காரணம் சுந்தரவடிவேலுவின் பேச்சு மட்டுமல்ல. அக்காட்சியில் சுந்தரவடிவேலுவைக் காண்பதற்காக அவனுடைய பிள்ளைகள் இருவரும் ஓடோடி வருவார்கள். அப்பிள்ளைகளுக்குத் தகப்பனாக வாழ்வதற்காவது அவன் உயிரோடு இருக்கவேண்டும் என்ற எண்ணம் பார்வையாளர்கள் மனதில் தன்னெழுச்சிக் கொள்கின்றது.*

*மரணதண்டனை விதிக்கப்பட்ட வேறொரு குற்றவாளியின் வழக்கினையும் இவ்விடத்தில் ஒப்பிட்டு நோக்கலாம். மரணதண்டனை கொடுக்கப்பட்டவர்களுக்கான இறுதி வாய்ப்பு குடியரசுத் தலைவரிடம் கருணைமனு அளிப்பது. 'பரமானந்த சரண் என்பவருக்குத் தன் மனைவியை எரித்துக் கொன்றதற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டது. குடியரசுத் தலைவரால் அவர் அனுப்பிய கருணை மனுவும் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் பரமானந்த சரண் தூக்கிலிடப்படுவதற்கு முன்னதாக அவரது மாமனார் இன்னொரு கருணை மனுவை அனுப்பிவைத்தார். இறந்துபோன தனது மகளுக்கும் சரணுக்கும் பிறந்த 5 வயது மகனின் எதிர்காலத்தை உத்தேசித்து அவருக்குக் கருணை அளிக்கக்கோரியது அம்மனு. அக்கருணை மனு ஏற்கப்பட்டு அவருக்குத் தண்டனையும் குறைக்கப்பட்டது' (அ.மார்க்ஸ்,2013:23). இத்திரைப்படத்திலும் ஊரார் அவனுக்குக் கருணையளிக்க மறுத்தாலும் பார்வையாளர்களின் மனதில் அவனுடைய குழந்தைகளின் எதிர்காலம் கருதி அவன் கருணை அளிக்கப்பட வேண்டியவன் என்ற உணர்ச்சியே மேலோங்குகிறது. மேலும், இறுதிக்காட்சியில் சுந்தரவடிவேலு தனது குழந்தைகளுக்கு முத்தமிட்டுவிட்டு, 'நல்லா படிக்கணும், நல்ல பேர் வாங்கணும், அப்பா குளிக்கப் போகிறேன்' எனச் சொல்லிவிட்டு ஆற்றில் இறங்கச் செல்லும்போது அதுவரை அவனுக்கு மரணதண்டனை வழங்கச் சம்மதித்த ஊரில் சிலர்கூட அத்தண்டனை வேண்டாம் எனத் தடுக்க முனைகின்றனர். திரைக்காட்சியில் வேண்டுமானால் அவனுக்கான தண்டனையைத் தடுப்பவர் சிலராக இருக்கலாம். ஆனால் பார்க்கின்ற பார்வையாளர்களின் மனதில் அவனுக்கு மரணதண்டனை வழங்கக்கூடாது என்ற உணர்ச்சிக் குரலே ஒட்டுமொத்தமாக ஒலிப்பதனை மறுப்பதற்கில்லை. 'தண்டனையின் நோக்கம் பழிவாங்கலோ (revenge) ஈடு செய்தலோ (retribution) அல்ல. குற்றத்தை உணர்ந்து திருந்தி வாழவைத்தலே அதன் முதன்மையான நோக்கம்' (அ.மார்க்ஸ்,2013:52) என்ற கருத்திற்கேற்ப, மனம் திருந்தியவனாக உணரப்படுகின்ற சுந்தரவடிவேலுவிற்கு மரணதண்டனை வழங்கக்கூடாது என்ற*

*மரணதண்டனைக்கு எதிரான உணர்வையே இத்திரைப்படம் பார்வையாளர்கள் மனதில் கட்டமைக்கிறது என்பதனை உய்த்துணர முடிகின்றது.*

**துணை நூல்கள்**


1. *புதுமைப்பித்தன், 1988. சிற்றன்னை, சென்னை, ஐந்திணைப் பதிப்பகம்.*
2. *மார்க்ஸ், அ. 2013, குற்றம்,தண்டனை,மரணதண்டனை, சென்னை, கருப்புப் பிரதிகள்.*
3. *ஜெகதீசன், ஆ. 2008. இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், சென்னை, தாமரை பப்ளிகேஷன்ஸ்.*